சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 165/2019

**PW 1 குஞ்சுபீவி** 31.01.2025

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு தற்போது 47 வயது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 41 என சொல்லியிருந்தால் அது சரியானதுதான். எனது வயது 41 தான். எனது மூத்த மகன் முகமது ஹக்கீம் வயது 27 ஆகும். பாத்திமா எனது மகள் அவரது வயது 22. இவர்களுக்கு இளையவர் தான் இறந்துபோன ஜான்ஷா ஷரீப் என்றால் சரிதான். நான் கூலி வேலைக்கு செல்கிறேன். விபத்து பற்றி நான் கூறியிருப்பது அனைத்தும் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தது பொருண்மை தவறு என போலீசார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். காவல் துறையினர் தாக்கல்செய்த குற்றப்பத்திரிக்கைக்கு எதிராக நான் தனிநபர் புகார் எதுவும் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுதாக்கல் செய்தபோது எனது மகனின் மாத வருமானம் ரூ.7,000/என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து என் மகனின் அஜாக்ரைதையாலும் அதிவேகத்தாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னஇடத்தில் என் மகன் வேலைபார்க்கவில்லை என்றாலும் என் மகனின் மாதவருமானம் ரூ.15,000/- இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்றிதழில் நான் மட்டுமே வாரிசு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 ம் மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றாலும், நஷ்டஈடு அதிகம் பெறவேண்டி அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர் மார்க்கெட் வேலைக்கு செல்கிறார். நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகம்

என்றால் சரியல்ல. விபத்து என் மகனின் அஜாக்ரதையால் ஏற்பட்டுள்ளதால் எனக்கு நஷ்டஈடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி